රාජ්‍ය සේවා, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Services, Provincial Councils and Local Government

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | COMBINED SERVICES DIVISION

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන தொலைபேசி:(94) 011- 2694560 Telephone | ෆැක්ස් தொலைநகல்:(94) 011- 2692254 Fax | ඊ-මේල් மின்னஞ்சல்:dgcs@pubad.gov.lk E-mail | වෙබ් අඩවිය இணையத்தளம்: www.pubad.gov.lk Web Site

මගේ අංකය எனது இல My No: COM/Trans/Gen | ඔබේ අංකය உமது இல Your No: | දිනය திகதி: Date: 2021.08.19

அனைத்து அமைச்சுக்களின்/ இராஜங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**<u>கொவிட் 19 தொற்று காலப்பகுதியில் இணைந்த சேவைகள் பிரிவின் கடமைகளை நடாத்திச் செல்தல் தொடர்பானது</u>**

தற்போது நாடு முகம்கொடுத்துள்ள கொவிட் 19 தொற்று காரணமாக இணைந்த சேவைகள் பிரிவின் அலுவலர்களுக்கு உடல்நலக்குறைவு ஏற்படுமிடத்து சில பிரிவுகள் திடீரென மூடவேண்டியேற்படலாம். இந்த சூழ்நிலையில், சாதாரண கடமைகளை நடாத்திச் செல்வதில் பாதிப்பேற்பட்டுள்ளதால் வினவப்படும் அனைத்து விசாரணைகளுக்கும் பதிலளிப்பதில் சிரமம் ஏற்படலாம்.

02. அதனால் அலுவலர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை கருத்தில் கொண்டு, இணைந்த சேவைகள் பிரிவிடம் வினவப்படும் விசாரணைகளை பின்வருமாறு மேற்கொள்ளுமாறு தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

**<u>அ. இணைந்த சேவைகள் பிரிவிடம் Online மூலமான விசாரணை (CS Inquiry)</u>**

இணைந்த சேவைகளின் அனைத்து அலுவலர்களும் LGN மூலமாக இணைய வசதியினை அணுகுவதாயின் http://10.250.1.112/misco/ எனும் இணையதள முகவரியையும் பிற வலைப்பின்னல் மூலமாக இணைய வசதியினை அணுகுவதாயின் http://43.224.125.38/misco/ மூலமாகவும் online system இல் இணைந்த சேவைகளின் தரவுத்தளத்தினை அணுக முடியுமென்பதோடு, அங்கு Menu இலுள்ள CS Inquiry மூலமாக தங்களது விசாரணைகளை அங்கு குறியீட்டில் (Index) குறித்துக்காட்டப்பட்டுள்ளபடி பொருத்தமான பிரிவுகளில் சமர்ப்பிக்க முடியும்.

**<u>ஆ.மின்னஞ்சல் மூலமாக விசாரணைகளை மேற்கொள்ளல்</u>**

கீழே காணப்படும் மின்னஞ்சல் முகவரிகளின் மூலமாக விசாரணைகளை சமர்ப்பிக்க முடியும்.
இவ்விசாரணைகளை சமர்ப்பிக்கும் போது சம்மந்தப்பட்ட பிரிவை சரியாகத் தெரிவு செய்து சமர்ப்பிப்பதன் மூலம் குறித்த விசாரணை தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்க எளிதாக இருக்குமென்பதோடு சேவை அவசியத்திற்கு வெளியே விசாரணைகளை சமர்ப்பிக்க வேண்டாம் என்பதை அலுவலர்களுக்கு தெரியப்படுத்தவும்.

03. குறித்த விசாரணைகள் CS Inquiry மூலமாக online இல் சமர்ப்பிக்கப்படுவது மிகவும் பொருத்தமானதென அறிவுறுத்தப்படுவதோடு, இது சாத்தியமில்லாத பட்சத்தில் மாத்திரமே தங்கள் விசாரணைகளை கீழே குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிகளுக்கு அனுப்புமாறு அலுவலர்களுக்கு தெரியப்படுத்தவும். பொருத்தமான காரணத்தை மின்னஞ்சல் தகவலில் Subject இல் தெளிவாக குறிப்பிட வேண்டும். அவ்வாறே இது தொடர்பாக ஏதும் இணைப்பை (Attachment) சமர்ப்பிக்க அலுவலர் விரும்புவாராயின் அதனை PDF வடிவத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்பதோடு பல பக்கங்களை கொண்டிருக்குமாயின் அதனை ஒரு வடிவத்திற்கு (Merge) உருவாக்கி மின்னஞுசல் தகவலில் உள்ளிட வேண்டும். அவ்வாறே மின்னஞுசல் தகவலானது பின்வரும் வடிவத்திற்கமைவாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அலுவலர்க்குரிய சேவை
கோப்பு இலக்கம் (File no) அல்லது பணியாளர் இலக்கம் (Employee no)
சேவை நிலையம்
விடயம்
தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம்

| பதவி | மின்னஞ்சல் முகவரி |
|---|---|
| இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் | dgcs.pubad@gmail.com |
| இணைந்த சேவைகள் பணிப்பாளர் I (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் சேவை) | dcs1.pubad@gmail.com |
| இணைந்த சேவைகள் பணிப்பாளர் II (இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை, ஒழுக்காற்று, பரீட்சைகள் மற்றும் ஆட்சேர்ப்பு) | dcs2.pubad@gmail.com |
| இணைந்த சேவைகள் பணிப்பாளர் III (அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவை, இலங்கை நூலகர் சேவை, இணைந்த சாரதிகள் சேவை மற்றும் அலுவலக உதவியாளர் சேவை) | dcs3.pubad@gmail.com |
| இணைந்த சேவைகள் பணிப்பாளர் IV (அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை) | dcs4.pubad@gmail.com |
| இணைந்த சேவைகள் உதவிப் பணிப்பாளர் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் சேவை - தரம் I) | adcs1.pubad@gmail.com |
| இணைந்த சேவைகள் உதவிப் பணிப்பாளர் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் சேவை - தரம் II) | adcs2.pubad@gmail.com |
| இணைந்த சேவைகள் உதவிப் பணிப்பாளர் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் சேவை - தரம் III) | adcs3.pubad@gmail.com |
| இணைந்த சேவைகள் பிரதிப் பணிப்பாளர் (கிளை IV - முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் சேவை இடமாற்றம் மற்றும் விசேட தரம்) | ddcs4.pubad@gmail.com |
| இணைந்த சேவைகள் உதவிப் பணிப்பாளர் (கிளை V - அலுவலக உதவியாளர் சேவை) | adcs5.pubad@gmail.com |
| இணைந்த சேவைகள் உதவிப் பணிப்பாளர் (கிளை VI - அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவை , இலங்கை நூலகர் சேவை, இணைந்த சாரதிகள் சேவை) | adcs6.pubad@gmail.com |
| இணைந்த சேவைகள் பிரதிப் பணிப்பாளர் (கிளை VII - இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை) | ddcs7.pubad@gmail.com |
| இணைந்த சேவைகள் உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை - இடமாற்றம்) | adcsdos1.pubad@gmail.com |
| இணைந்த சேவைகள் உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை - உறுதிப்படுத்தல்) | adcsdos2.pubad@gmail.com |

| | |
|---|---|
| இணைந்த சேவைகள் உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை - பதவி உயர்வு) | adcsdos3.pubad@gmail.com |
| இணைந்த சேவைகள் உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை - உறுதிப்படுத்தல்) | adcsdos4.pubad@gmail.com |
| இணைந்த சேவைகள் உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை - கொள்கைகள் மற்றும் உள்ளீர்த்தல்) | adcsdos5.pubad@gmail.com |
| இணைந்த சேவைகள் உதவிப் பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு மற்றும் பரீட்சைகள் கிளை) | adcs.rec.pubad@gmail.com |
| இணைந்த சேவைகள் உதவிப் பணிப்பாளர் (ஒழுக்காற்றுக் கிளை) | adcs.disc.pubad@gmail.com |
| நிர்வாக உத்தியோகத்தர் (நிர்வாகக் கிளை) | aocs.pubad@gmail.com |

04. தங்கள் நிறுவனத்தின் இணைந்த சேவைகள் அலுவலர்களுக்கு பின்வரும் விடயங்கள் தொடர்பாக தெரியப்படுத்தவும்.

i. 2021/08/06 ஆம் திகதி வெளியிடப்பட்ட வருடாந்த இடமாற்ற சுற்றறிக்கைக்கு அமைவாக சாதாரண இடமாற்றங்கள் மற்றும் ஒத்துமாறுதல்கள் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது மற்றும் இவ் இடமாற்றங்கள் தொடர்பாக இணைந்த சேவைகள் பிரிவிற்கு வெளியேயுள்ள குழுக்களினால் மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்களுக்கு ஏமாற வேண்டாமென்பதோடு அக்குழுக்களுக்கு தங்கள் தகவலை வழங்குவதைத் தவிர்க்கவும்.

ii. இணைந்த சேவைகள் பிரிவை தொடர்புகொள்ளுவதற்காக மேலேயுள்ள வசதிகள் வழங்கப்பட்டுள்ளது, சிரமங்களுக்கு மத்தியிலும் செயற்பாடுகள் தொடர்வதனால், இணைந்த சேவைகள் பிரிவிற்கு நேரடியாக வருகை தந்து விசாரணைகளை மேற்கொள்ளுவதைத் தவிர்க்கவும்.

05. இவ் அசாதாரண காலப்பகுதியிலும் இணைந்த சேவைகளின் செயற்பாடுகளை தொடர்வதற்கு இதுவரை தாங்கள் வழங்கிய ஆதரவிற்கு நன்றி தெரிவிப்பதோடு மேலே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு தங்கள் நிறுவனத்தின் அலுவலர்களுக்கு அறியத்தருமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்